போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு பிரதமர் மோடி அழைப்பு

புதுடெல்லி, நவ.13– போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என பிரதமர் மோடி கூறினார்.

டெல்லியில் உள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் செய்தி யாளர்களுக்காக 'தீபாவளி மிலன்' நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

பிரதமர் மோடி, மத்திய மந்திரிகள் ராஜநாத் சிங், அமித்ஷா, ஜே.பி.நட்டா, பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின் நபின் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர்.

அப்போது பிரதமர் மோடி பேசியதாவது:–

செய்தித்தாள் அச்சுக்குச் செல்வது முதல், ஒரு செய்தியை ஒளிபரப்புவது வரை, அனைத்திற்கும் ஒரு குறிப்பிட்ட காலக்கெடு உள்ளது. இந்தக் காலக்கெடு இல்லையென்றால், செய்தி அறையில் இருப்பவர்கள் முதல் களப்பணியாளர்கள் வரை, 'இன்னும் நேரம் இருக்கிறது, பார்த்துக்கொள்ளலாம்', 'பிறகு செய்து கொள்ளலாம், என்ன அவசரம்? முன்பே சமாளித்திருக்கிறோம். இப்போதும் சமாளித்துவிடலாம்' என்று அலட்சியமாக இருக்கக்கூடும். அதனால்தான் காலக்கெடு மிகவும் முக்கியமானது.

இது தனிநபருக்கும், நிறுவனத்திற் கும், ஏன் ஒரு நாட்டிற்கும் கூட பொருந்தும். இன்று, நம் நாடும் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. அதுதான் 2047ம் ஆண்டு.

இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற கனவு சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்தே நம்மிடம் உள்ளது. இப்போது, நம் முன்னால் இலக்கை அடைய



ஒரு குறிப்பிட்ட ஆண்டு உள்ளது. அது 2047. 2047ம் ஆண்டிற்குள் இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாக நாம் அனைவரும் இணைந்து மாற்றுவோம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

கடந்த 25 ஆண்டுகளில், நாடு பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. சிந்தனைகளின் பரந்தபன்முகத்தன்மை நமது ஜனநாயகத்தை தாங்கி, அதை உயிர்ப்புடன் வைத்திருக்கிறது. இந்த செயல்பாட்டில் இந்திய ஊடகங்கள் உண்மையிலேயே மிக முக்கிய பங்காற்றுகின்றன. ஒரு பேரழிவு ஏற்படும்போது அது விபத்தாகவோ, நிலநடுக்கமாகவோ, அல்லது பேரழிவை ஏற்படுத்தும் வெள்ளமாகவோ இருக்கலாம். பலர் அதில் இருந்து தப்பி ஓடக்கூடும். ஆனால் நமது கள நிருபர்கள் நேராக அதை நோக்கி துணிவோடு செல்கிறார்கள்.

இத்தகைய அர்ப்பணிப்பு அரிதானது. நான் அதை எப்போதும் உயர்வாக மதிக்கிறேன்.

இன்று இந்தியா முன்னேறி வரும் சாதனைகளை கருத்தில் கொண்டால், விக்சித் பாரத் (வளர்ச்சியடைந்த பாரதம்) என்ற இலக்கு முழுமையாக எட்டக்கூடிய தூரத்தில் உள்ளது. நிலவின் தென் துருவத்துக்கு அருகில் தரையிறங்கி இந்தியா வரலாறு படைக்கும், அது உலகின் 2–வது பெரிய மொபைல் உற்பத்தியாளராக மாறும் என்று யார் கற்பனை செய்திருப்பார்கள்?.

இந்த 12 ஆண்டுகளில், இந்தியா உலகின் 3–வது பெரிய ஸ்டார்ட்–அப் சூழலமைப்பை உருவாக்கி உள்ளது.

இன்று, நமது யு.பி.ஐ., உலகளவில் மிகப்பெரிய நிகழ்நேர பணப்பரிவர்த்தனை அமைப்பாக மாறியுள்ளது.

இவை அனைத்தையும் அடைய முடிந்த நம்மால், விக்சித் பாரத் என்ற கனவை நிச்சயமாக நனவாக்க முடியும்.

போதைப்பொருள் பயன்பாடு

ஒரு காலத்தில், செங்கோட்டையில் இருந்து பேசும் ஒவ்வொரு தலைவரும், "வறுமையை ஒழிப்பது ஒரு கட்டாய மந்திரம்" என்பது போல பேசுவார்கள். ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் வறுமையை ஒழிப்பதாக வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. ஆனால் இன்று, ஏழைகள் வறுமையில் இருந்து அவர்களாகவே மீண்டெழுந்து கொள்கிறார்கள். அதற்கு நாம் வகை செய்து இருக்கிறோம்.

போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். நமது இளைஞர்களை இந்த தீங்கில் இருந்து நாம் விலக்கி வைக்க வேண்டும்.

ஊடகங்கள், தேசிய ஒற்றுமையை வளர்க்கும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களுக்கு இடமளித்து, அவற்றை செய்தியில் இணைத்துக் கொள்ளும்போது, அது விக் சித் பாரத் எனும் லட்சியத்தை மேலும் துரிதப்படுத்தும்.

இவ்வாறு அவர் பேசினார்.

சென்னையில் 12 மினி தாலுகா அலுவலகங்கள்: முதலமைச்சர் விஜய் உத்தரவு

சென்னை, நவ.13– சென்னையில் 12 மினி தாலுகா அலுவலகங்கள் அமைக்க முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது;–

அரசு சேவைகளை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கி, பொது மக்களுக்கு எளிதான, விரைவான, வெளிப்படையானமற்றும்நம்பகமான சேவையை வழங்குவது தமிழ்நாடு அரசின் நோக்கமாகும். அதன்படி, தமிழ்நாடு அரசு இணையவழி சான்றிதழ் வழங்கும் முறையை விரிவுபடுத்தி வருகிறது. மேலும், வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, வகுப்புச் சான்று, முதல் பட்டதாரி சான்று, வாரிசு சான்று, பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் உள்ளிட்ட 26 சேவைகளை இணையவழி மூலம் எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் விண்ணப்பித்துப் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாநிலத்தின் தலைநகரமாக உள்ள சென்னை மாவட்டத்தில் அதிக மக்கள்தொகை உள்ளதால், வருவாய்த்துறை சார்ந்த இணையவழி சேவைகள் மற்றும் இதர நிலம் தொடர்பான சேவைகளைப் பொதுமக்கள் சிரமமின்றி விரைந்து பெறுவதற்கு ஏதுவாக மினி தாலுகா அலுவலகங்கள் உருவாக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

எனவே முதலமைச்சர் விஜய்யின் உத்தரவுப்படி, சென்னை மாவட்டத்தில், ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் துணை வட்டாட்சியர் தலைமையில் 12 மினி தாலுகா அலுவலகங்கள் அமைக்கப்படும்.

அதன்படி, சென்னை மாவட்டத்திலுள்ள 8 தாலுகாவில் பெரம்பூர் தாலுகாவுக்கு உட்பட்ட கொடுங்கையூர் மற்றும் எருக் கஞ்சேரி, மதுரவாயல் தாலுகாவுக்கு உட்பட்ட போரூர், அம்பத்தூர் தாலுகாவுக்கு உட்பட்ட முகப்பேர் மற்றும் கொரட்டூர், மாம்பலம் தாலுகாவுக்கு உட்பட்ட சாலிகிராமம், சோழிங்கநல்லூர் தாலுகாவுக்கு உட்பட்ட நீலாங்கரை, பள்ளிக்கரணை மற்றும் சோழிங்கநல்லூர், வேளச்சேரி தாலுகாவுக்கு உட்பட்ட திருவான்மியூர்– பெசன்ட் நகர், மயிலாப்பூர் தாலுகாவுக்கு உட்பட்ட திருவல்லிக்கேணி, ஆலந்தூர் தாலுகாவுக்கு உட்பட்ட மணப்பாக்கம் ஆகிய 12 மினி தாலுகா அலுவலகங்கள் அமைக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



திருவண்ணாமலை மாவட்ட கண்காணிப்பு அலுவலர், சமூக நல இயக்குனர் பிருந்தா தேவி, மாவட்ட கலெக்டர் வந்தனா கார்க் ஆகியோர் கீழ்பெண்ணாத்தூர் அரசு ஆண்கள் பள்ளியில் பசுமை பள்ளி திட்டத்தின் கீழ் மரங்கன்று நட்டனர்.

W.S. இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

CIN: L42909TN1961PLC004568

பதிவு அலுவலகம்: 3வது தளம், புதிய எண்.48, பழைய எண்.21, சவிதானு பில்டிங், காசா மேஜர் சாலை, எழும்பூர், சென்னை – 600 008.

செப்டம்பர் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் அறிக்கை

[SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 இன் விதிமுறை 33இன் கீழ்]

நவம்பர் 12, 2026 அன்று நடைபெற்ற W.S. இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்டின் ("நிறுவனம்") இயக்குனர்கள் குழு கூட்டத்தில், செப்டம்பர் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் (தனியான மற்றும் ஒருங்கிணைந்த), சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஆய்வு அறிக்கையுடன், நிறுவனத்தின் இணையதளத்தில் கீழே உள்ள இணைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள விரைவு பதில் ("QR") குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமும் பார்வையிடலாம்:

Web link: https://wsindustries.in/wp-content/uploads/2026/11/WSI_BM_Results_Q_II_12112026_SD.pdf

QR Code:

இடம்: சென்னை
தேதி: நவம்பர் 12, 2026

W.S. இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்–க்காக
செய்யாத்துரை நாகராஜன்
தலைவர்
DIN: 07036078

Bonfiglioli

We engineer dreams

BONFIGLIOLI TRANSMISSIONS LIMITED

(formerly known as Bonfiglioli Transmissions Private Limited)

Regd Office : Plot No. AC7-AC11, SIDCO Industrial Estate, Thirumudivakkam, Kancheepuram - 600132
CIN: U29309TN1998PLC040717 | **Email**: btl.secretarial@bonfiglioli.com | **Website**: www.bonfiglioli.in

STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED SEPTEMBER 30, 2026

(All amounts are in Millions of Indian Rupees except EPS and unless otherwise stated)

Sl. No.	Particulars	Quarter ended			Nine months ended		Year ended
		September 30, 2026	June 30, 2026	September 30, 2025 (Restated)	September 30, 2026	September 30, 2025 (Restated)	December 31, 2025
		(Unaudited)	(Unaudited)	Refer Note 5 and Note 7	(Unaudited)	Refer Note 7	(Audited)
1	Revenue from operations	6,601.71	5,616.13	5,069.09	17,920.40	14,592.33	20,135.26
2	Other income	38.36	63.77	18.08	105.20	77.80	100.63
3	**Total Income (1+2)**	**6,640.07**	**5,679.90**	**5,087.17**	**18,025.60**	**14,670.13**	**20,235.89**
4	**Expenses**						
	(a) Cost of raw materials & components consumed	3,926.47	3,760.45	3,034.99	11,468.23	9,015.40	11,967.18
	(b) Changes in inventories of finished goods and work-in-progress	118.63	(343.20)	89.40	(514.41)	123.81	542.53
	(c) Employee benefits expense	316.34	297.22	258.34	905.94	750.62	1,062.70
	(d) Finance costs	23.22	26.11	22.19	63.94	57.93	77.77
	(e) Depreciation and amortisation expense	130.90	137.50	119.82	402.51	353.84	478.23
	(f) Other expenses	951.27	792.52	752.54	2,527.00	2,127.02	2,855.15
	Total Expense	**5,466.83**	**4,670.60**	**4,277.28**	**14,853.21**	**12,428.62**	**16,983.56**
5	**Profit before tax (3-4)**	**1,173.24**	**1,009.30**	**809.89**	**3,172.39**	**2,241.51**	**3,252.33**
6	**Tax Expense :**						
	(a) Current tax	318.91	261.91	191.69	828.22	664.02	818.82
	(b) Adjustment of tax relating to earlier periods	0.35	(0.02)	(4.64)	0.43	(4.37)	61.24
	(c) Deferred tax expense/ (income)	(17.05)	(3.40)	(7.54)	(13.11)	(93.40)	(6.47)
	Total Tax expenses	**302.21**	**258.49**	**179.51**	**815.54**	**566.25**	**873.59**
7	**Profit after tax (5-6)**	**871.03**	**750.81**	**630.38**	**2,356.85**	**1,675.26**	**2,378.74**
8	**Other Comprehensive Income:**						
	Items that will not to be reclassified to profit or loss in subsequent periods:						
	(a) Remeasurements gain/ (loss) of post-employment benefit obligations	12.05	35.71	(3.20)	47.77	(3.21)	(23.19)
	(b) Income tax effect relating to the above item	(3.03)	(8.99)	0.81	(12.02)	0.81	5.84
	Other comprehensive income/(loss) for the period/year, net of tax	**9.02**	**26.72**	**(2.39)**	**35.75**	**(2.40)**	**(17.35)**
9	**Total comprehensive income for the period/ year, net of tax (7+8)**	**880.05**	**777.53**	**627.99**	**2,392.60**	**1,672.86**	**2,361.39**
10	**Paid-up equity share capital (Face value of ₹.10/- each)**	**1,879.96**	**1,879.96**	**1,253.31**	**1,879.96**	**1,253.31**	**1,253.31**
11	**Reserves (i.e. Other Equity)**	**9,342.75**	**8,462.72**	**7,963.08**	**9,342.75**	**7,963.08**	**8,676.62**
12	**Earnings per equity share (EPS)**						
	(a) Basic (Amount in ₹)*	4.63	3.99	3.35	12.54	8.91	12.65
	(b) Diluted (Amount in ₹)*	4.63	3.99	3.35	12.54	8.91	12.65
	* The basic and diluted Earnings Per share are not annualized for the periods other than December 31, 2025						

Notes to Unaudited Financial Results for the Quarter and nine months ended September 30, 2026

1. In terms of Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations 2015, as amended, the above statement of unaudited financial results of the Company for the quarter and nine months ended September 30, 2026 have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors in their respective meetings held on November 12, 2026 and have been subject to a limited review by the statutory auditors of the Company.
2. The unaudited financial results have been prepared in accordance with the recognition and measurement principles provided in Indian Accounting Standards (Ind AS) 34 on 'Interim Financial Reporting' specified under section 133 of the Companies Act, 2013, as amended, read with Companies (Indian Accounting Standards) Rules, 2015 (as amended) and other accounting principles generally accepted in India and in terms of Regulation 33 of the (Listing Obligations and Disclosure Requirements) Regulations 2015, as amended (Listing requirements).
3. The unaudited financial results for the quarter ended June 30, 2026 which have been approved by the Board of Directors, have not been reviewed or audited by the statutory auditors.
4. Subsequent to the end of the quarter and nine months ended September 30, 2026, the Company has completed an Initial Public Offer ("IPO") by way of an Offer for Sale of 43,239,042 Equity shares of Face value of ₹ 10/- each of the Company by certain selling shareholders for an issue price of ₹ 586 per equity share aggregating to ₹ 25,336.63 Million. The Equity shares of the Company were listed on National Stock Exchange of India Limited (NSE) and BSE Limited (BSE) on October 23, 2026.
5. The figures for the quarter ended September 30, 2025 are the balancing figures between the audited figures for the nine months ended September 30, 2025 and the audited figures for the six months ended June 30, 2025, after giving effect to adjustments for subsequent events.
6. The Board of Directors is considered to be the Chief Operating Decision Maker of the Company within the purview of Ind AS 108, Operating Segments. The Board examines the Company's performance and has determined the Company as a whole as one segment; hence the Company has not made any additional segment disclosures.
7. The Company entered into a Business Transfer Agreement ("BTA") on December 15, 2025 with its related party, Bonfiglioli Drive Solutions Private Limited ("BDSPL"), which is engaged in the manufacturing of gear components to align with the Group's business strategy in India. The BTA has been approved by the Board of Directors on December 15, 2025. Pursuant to the BTA, the Company has acquired the business of BDSPL, comprising tangible movable properties, business contracts, employees, associated commercial rights, and has assumed the related liabilities, for a purchase consideration of MINR 214.40. The Company has assessed this acquisition as a business combination under common control.
   The transaction has been accounted in accordance with "Pooling of interest method" as laid down in Appendix C - 'Business combinations of entities under common control' of Ind AS 103 notified under Section 133 of the Companies Act read with the Companies (Indian Accounting Standards) Rules, 2015. Accordingly, the audited figures for the nine months ended September 30, 2025 and the figures for the quarter ended September 30, 2025, have been restated to give effect to the business combination.
8. This Financial Results is also available on the stock exchange websites www.bseindia.com and www.nseindia.com and on our website www.bonfiglioli.in.

For and on behalf of Board of Directors
Bonfiglioli Transmissions Limited

Kennady V Kaippally
Managing Director
DIN : 08110794

Place: Chennai
Date: November 12, 2026

Adfactors 538/26

ராடான் மீடியா ஒர்க்ஸ் இந்தியா லிமிடெட்

CIN: L92111TN1999PLC043163

14 ஜெயம்மாள் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை 600 018, தொலைபேசி: 91-44-2431 3001 | Fax: 91-44-2431 3008 , இ-மெயில்: info@radaan.tv இணையதளம்: www.radaan.tv

30.09.2026ல் முடிந்த காலாண்டு மற்றும் அரை ஆண்டிற்கான ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத (பரிசீலனையான) நிதிநிலை முடிவுகளின் சாராம்சம்

(விவரங்கள் ரூபாய் லட்சம் மதிப்பில்)

வ.எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த அரையாண்டு		முடிந்த ஆண்டு
		30.09.2026	30.06.2026	30.09.2025	30.09.2026	30.09.2025	31.03.2026
		(தணிக்கையாகாதது)	(தணிக்கையாகாதது)	(தணிக்கையாகாதது)	(தணிக்கையாகாதது)	(தணிக்கையாகாதது)	(தணிக்கையானது)
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	260.78	152.15	291.77	412.93	321.06	650.04
2	காலத்திற்கான வரிக்கு முன் அசாதாரண மற்றும் அபூர்வ செயல்பாடுகள் மூலம் நிகர லாபம்/(நஷ்டம்)	(7.63)	(44.16)	(153.10)	(51.80)	(302.99)	(481.44)
3	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்கு முன் அசாதாரணமானவைகளுக்குப் பின்	(7.63)	(44.16)	(153.10)	(51.80)	(302.99)	(481.44)
4	காலத்திற்கான வரிக்கு பின் அசாதாரண மற்றும் நீங்கலான செயல்பாடுகளுக்கு பிற்தைய நிகர லாபம்/(நஷ்டம்)	(7.16)	(43.74)	(152.59)	(50.91)	(301.98)	(479.42)
5	காலத்திற்கான விரிவான வருமானம் (காலத்திற்கான வரிக்குப் பிந்தைய லாபம்/நஷ்டத்தை உள்ளடக்கிய மற்றும் கூடுதல் வருமானம்)	(7.16)	(43.72)	(152.62)	(50.90)	(301.96)	(479.35)
6	பங்கு மூலதனம்	1,083.23	1,083.23	1,083.23	1,083.23	1,083.23	1,083.23
7	ஒரு பங்குக்கான வருமானம் (ஒவ்வொன்றும் ரூ.2/-) (தொடர்ச்சியான மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்)						
	(அ) அடிப்படை	(0.01)	(0.08)	(0.28)	(0.09)	(0.56)	(0.89)
	(ஆ) பலம் குறைந்தது	(0.01)	(0.08)	(0.28)	(0.09)	(0.56)	(0.89)

குறிப்பு 1:

30.09.2026ல் முடிந்த காலாண்டு மற்றும் அரை ஆண்டிற்கான தனியான தணிக்கை செய்யப்படாத (பரிசீலனையான) நிதிநிலை முடிவுகளின் கூடுதல் சாராம்சம்

(விவரங்கள் ரூபாய் லட்சம் மதிப்பில்)

வ.எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த அரையாண்டு		முடிந்த ஆண்டு
		30.09.2026	30.06.2026	30.09.2025	30.09.2026	30.09.2025	31.03.2026
		(தணிக்கையாகாதது)	(தணிக்கையாகாதது)	(தணிக்கையாகாதது)	(தணிக்கையாகாதது)	(தணிக்கையாகாதது)	(தணிக்கையானது)
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	260.70	152.15	291.77	412.85	315.00	643.98
2	காலத்திற்கான வரிக்கு முன் அசாதாரண மற்றும் நீங்கலான செயல்பாடுகளுக்கு பிற்தைய நிகர லாபம்/(நஷ்டம்)	(7.68)	(44.08)	(153.10)	(51.76)	(309.05)	(484.37)
3	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்குப் பின் அசாதாரணமானவைகளுக்குப் பின்	(7.21)	(43.66)	(152.59)	(50.87)	(308.04)	(482.35)
4	காலத்திற்கான விரிவான வருமானம் (காலத்திற்கான வரிக்குப் பிந்தைய லாபம்/நஷ்டத்தை உள்ளடக்கிய மற்றும் கூடுதல் வருமானம்)	(7.21)	(43.64)	(152.62)	(50.86)	(308.02)	(482.28)

குறிப்பு 2: மேற்குறிப்பிட்டுள்ளவை [செபி (லிஸ்டிங் ஆப்ளிகேஷன் அண்டு டிஸ்க்ளோஷர் ரிகொயர்மெண்ட்ஸ்) ரெகுலேஷன்ஸ், 2015] [SEBI (Listing, Obligation and Disclosure Requirements) Regulations, 2015], ரெகுலேஷன் 33ன்படி பங்குச் சந்தையில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் சாராம்சம். காலாண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் முழுமையான வடிவம் பங்கு சந்தைக்கான இணையதளத்தில் (www.bseindia.com / www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.radaan.tv) உள்ளது.

நாள் :12/11/2026
இடம் : சென்னை

ராடான் மீடியா ஒர்க்ஸ் இந்தியா லிமிடெட்டுக்காக
ஒப்பம்/-
ஆர் ராதிகா சரத்குமார்
நிர்வாக இயக்குநர்

ஆஷியானா அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : எண்.34, ஆண்டாள் நகர், பாலுசெட்டி சத்திரம், காஞ்சிபுரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் - 631 551 (தமிழ்நாடு) தொலைபேசி எண். +914428344820, இணையதளம் : www.aail.in

30 செப்டம்பர், 2026 ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தனியான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்

(ரூ. லட்சத்தில்)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த அரையாண்டு		முடிந்த ஆண்டு
		தணிக்கை ஆகாதது	தணிக்கை ஆகாதது	தணிக்கை ஆகாதது	தணிக்கை ஆகாதது	தணிக்கை ஆகாதது	தணிக்கை ஆனது
		30-09-2026	30-06-2026	30-09-2025	30-09-2026	30-09-2025	31-03-2026
1	இதர வருமானம் உள்பட செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	8.64	15.22	29.71	23.86	51.98	100.48
2	காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	(2.99)	(1.59)	2.17	(4.58)	1.64	6.75
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(2.99)	(1.59)	2.17	(4.58)	1.64	6.75
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(2.99)	(1.59)	1.77	(4.58)	1.24	5.05
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடங்கியது)	(2.99)	(1.59)	1.77	(4.58)	1.24	5.05
6	சம பங்கு மூலதனம் (முகமதிப்பு ரூ.10/- ஒரு பங்கு)	460.00	460.00	460.00	460.00	460.00	460.00
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு தணிக்கையான நிதிநிலை அறிக்கைபடி	-	-	-	-	-	(196.25)
8	ஒரு பங்கு சம்பாத்தியம் (EPS) (ரூபாயில்) (முகமதிப்பு ஒவ்வொன்றம் ரூ. 10/-)						
	(அ) அசாதாரண அயிட்டங்களுக்கு முன் அடிப்படை மற்றும் டைலூடட் EPS	(0.07)	(0.03)	0.04	(0.10)	0.03	0.11
	(ஆ) அசாதாரண அயிட்டங்களுக்கு பின் அடிப்படை மற்றும் டைலூடட் EPS	(0.07)	(0.03)	0.04	(0.10)	0.03	0.11

குறிப்புகள் : 1. மேற்கண்ட முடிவுகள் தணிக்க குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு நவம்பர் 12,2026 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2. நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 133 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியல் தரநிலைகளின்படி, நிறுவனங்கள் (கணக்குகள்) விதிகள், 2014 இன் விதி 7 உடன் படிக்கப்பட்டபடி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

3. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டு செப்டம்பர் 30, 2026ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தனியான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுக்காமக மேற்கண்டவை உள்ளது. செப்டம்பர் 30, 2026ல் முடிந்த காலண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளமான www.aail.in -ல் உள்ளது.

இடம் : சென்னை
தேதி : 12-11-2026

ஆஷியானா அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/-
பவன் குமார் M,
முழுநேர இயகுனர்
DIN: 02438906